சுற்றிக்கை இலக்கம். PRE/2024/48

எனது இல :- TR/PRE/CIR/2024
தேர்தல் ஆணைக்குழு,
சரண மாவத்தை, ராஜகிரிய.
2024.08.

**TR -10**

**அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும்**
**அனைத்து திணைக்களங்களின் / தாபனங்களின் தலைவர்கள் ஆகியோருக்கும்,**

**<u>சனாதிபதித் தேர்தல் - 2024.09.21</u>**
**<u>தலைமை வாக்கெண்ணல் அலுவலர்கள்/ உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள்</u>**
**<u>தேர்தல் கடமைகளுக்காக உத்தியோகபூர்வ வாகனங்களை (Assigned Vehicles) எடுத்துச் செல்லல்.</u>**

2024/09/21 ஆம் திகதி நடாத்தப்படவுள்ள சனாதிபதித் தேர்தலில் தலைமை வாக்கெண்ணல் அலுவலர்களாக அல்லது உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களாக நியமனம் பெற்றுள்ள அலுவலர்களுக்கு தமக்குரிய உத்தியோகபூர்வ வாகனம் இருந்தால் அவ்வுத்தியோகபூர்வ வாகனத்தை தமது அலுவலகம்/வீட்டிலிருந்து தெரிவத்தாட்சி அலுவலர்களின் அலுவலகத்திற்கு செல்வதற்காகப் பயன்படுத்துவதற்கு அனுமதியளிக்கின்றேன். அதற்காக மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்/பிரதி/உதவித் தேர்தல்கள் ஆணையாளரின் முன்னனுமதியினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டுமென்பதுடன் அதற்காகப் பயன்படுத்த வேண்டிய **V - 6** படிவம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

**02. குறித்தொதுக்கப்பட்ட வாகனமொன்றைப் பயன்படுத்துவதற்கு உரித்துள்ள அலுவலருக்கு ஒதுக்கப்பட்ட வாகனத்தை அவரின் தனிப்பட்ட வாகனமாகக் கருதி நடவடிக்கை எடுக்க முடியும். தமது உத்தியோகபூர்வ வாகனத்தைக் கொண்டு செல்லும் அலுவலர்கள் குறித்த மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலர்களின் அலுவலகத்திற்கு செல்வதற்குள்ள தூரத்திற்குத் தேவையான எரிபொருளை தமது சொந்தப் பணத்தில் பெற்றுக்கொண்டு குறித்த பற்றுச்சீட்டினை தேர்தல்கள் செயலகத்திற்கு சமர்ப்பித்த பின்னர் அத்தொகை மீளச்செலுத்தப்படும். இந்த அலுவலர்கள் தமது அலுவலகத்தில் அல்லது தெரிவத்தாட்சி அலுவலர்களிடம் எரிபொருளை பெற்றுக்கொள்ளல் ஆகாது. ஆனால் உத்தியோகபூர்வ வாகனத்தைக் கொண்டு வரும் அலுவலரொருவர் தேர்தல் நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் மீண்டும் தமது வீட்டிற்குச் செல்வதற்காக தெரிவத்தாட்சி அலுவலர்களிடம் எரிபொருளுக்காக கோரிக்கை விடுத்தால் அவருக்கு மீண்டும் செல்வதற்குத் தேவையான எரிபொருளைக் கணக்கிட்டு அந்த எரிபொருள் அளவினை வழங்குவதற்கு அனுமதியளிக்கின்றேன். மேலும் அவ்வாறு வழங்கப்பட்ட எரிபொருள் அளவினை எரிபொருள் மீள் செலுத்தல் படிவத்தில் (AV-01) பதிவு செய்தல் வேண்டும். (AV-01) படிவத்தின் பிரதி இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அவ்வாறு எரிபொருளைக் கோரிய அலுவலர்கள் தொடர்பான அறிக்கையை அந்தந்த மாவட்டங்களின் தெரிவத்தாட்சி அலுவலர்/பிரதி/உதவித் தேர்தல்கள் ஆணையாளர்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தினூடாக எனக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.**

03. தேர்தல் கடமைக்காக நிர்ணயிக்கப்பட்ட மாவட்டத்திற்குச் செல்வதற்குத் தேவையான எரிபொருளுக்காக தங்களுக்குச் செலவான தொகையினை மீளளிப்புச் செய்வதற்காக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள AV-1 படிவத்தை பூரணப்படுத்தி குறித்த பற்றுச்சீட்டுடன் பூரணப்படுத்திய பொது 35 உறுதிச்சீட்டினை தேர்தல் முடிவடைந்ததன் பின்னர் தேர்தல்கள் செயலகத்திற்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவும். தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட அலுவலர்களுக்கு செலுத்தப்பட்ட கொடுப்பனவுகளை மீளச் செலுத்திக் கொள்வதற்காக சமர்ப்பிக்கும் படிவங்களில் எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்காக செலவிட்ட தொகையை மீளச் செலுத்துவதற்கான கோரிக்கைகளை சேர்த்தல் ஆகாது. உத்தியோகபூர்வ வாகனங்களைக் கொண்டு செல்லும்போது அரச சாரதியொருவரை ஈடுபடுத்த வேண்டுமென்பதுடன் அதற்கான கொடுப்பனவு அறிவுறுத்தல்கள் எதிர்வரும் காலத்தில் என்னால் வெளியிடப்படவுள்ள கொடுப்பனவுச் சுற்றறிக்கை மூலம் வழங்கப்படும். இச்சாரதிகளின் வரவுச் சான்றிதழாக CE 51 படிவத்தைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

04. அறிவுறுத்தல் வகுப்புகளில் பங்குபற்றுவதற்காக தமது சொந்த வாகனத்தை பயன்படுத்திக் கொள்ளும் அலுவலர்கள் அவ்வாறு சொந்த வாகனத்தில் வருகை தந்ததாக வருகைச் சான்றிதழைச் சமர்ப்பித்தால் பிரயாணம் செய்த தூரத்திற்காக தாபன விதிக்கோவையின் XIV அத்தியாயத்தின் விதிமுறைகளின்படி மைல் கூலியினைப் பெற்றுக்கொள்ள முடியும். மேலும் தனிப்பட்ட பாவணையின் பொருட்டு குறித்தொதுக்கப்பட்ட உத்தியோகபூர்வ வாகனங்களைப் பயன்படுத்தும் அலுவலர்களுக்கு எரிபொருள் தேவைப்பட்டால் அது சம்பந்தமாக அறிவுறுத்தல் வகுப்புக்களுக்கு அழைப்பு விடுத்த பிரதி/உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கூடாக எழுத்துமூலம் தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்தினை உசாவுதல் பொருத்தமானதாகும்.

05. இச்சுற்றறிக்கையின் பிரதியினை தங்களின் அமைச்சின் கீழ் இருக்கும் அனைத்து திணைக்கங்களின் தலைவர்களுக்கும் அனுப்புவதற்கு தயவுசெய்து நடவடிக்கை எடுக்கவும்.

06. இத்தேர்தலை வெற்றிகரமாக நடாத்தி முடிப்பதற்கு தங்களிடமிருந்து கிடைக்கப்பெறுகின்ற ஒத்துழைப்பினை மிகவும் மெச்சுகின்றேன்.

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்.

**பிரதிகள் :**

| | | |
|---|---|---|
| 1. கணக்காய்வாளர் நாயகம் | - | தயவன்புடன் தகவலுக்காக |
| 2. மேலதிகத் தேர்தல்கள் ஆணையாளர் (தேசிய தேர்தல்கள்) | - | தயவன்புடன் தகவலுக்காக |
| 3. அனைத்து தெரிவத்தாட்சி அலுவலர்கள்/ பிரதி / உதவி தேர்தல்கள் ஆணையாளர்கள் | | தேவையான அனுமதியை வழங்குவதற்காகவும் மற்றும் தகவலுக்காகவும் |
| 4. தலைமை நிதி அலுவலர் | - | தயவன்புடன் தேவையான நடவடிக்கைகளுக்காக |
| 5. தலைமை உள்ளகக் கணக்காய்வாளர் | - | தயவன்புடன் தகவலுக்காக |
| 6. கணக்காளர் (பெறுகை) | - | சகல மாவட்டங்களுக்கும் தேவையானளவு CE 51 படிவத்தினை வழங்குவதற்காக |
| 7. கணக்காளர் (கொடுப்பனவு) | - | தயவன்புடன் தகவலுக்காக |

**(அனுமதியைப் பெறுவதற்காக 02 பிரதிகளில் பூர்த்தி செய்து குறிப்பிட்ட மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலருக்கு/ பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளருக்கு அனுப்பி வைக்கவும்.)**

**சனாதிபதித் தேர்தல் - 2024.09.21**

**உத்தியோகபூர்வ வாகனம் உரித்துடைய அலுவலர்கள் தேர்தல் கடமைகளுக்காக உத்தியோகபூர்வ வாகனத்தை எடுத்துச் செல்வதற்கு அனுமதி கோரல்**

1. அலுவலரின் பெயர் : ....................................................................................

2. பதவி : ....................................................................................

3. அலுவலக முகவரி : ....................................................................................

4. வாகனத்தின் இல. : ............................. வாகன வகை : கார்/ கெப்/ ஜீப்

5. பெற்றோல் வாகனமா? டீசல் வாகனமா? : பெற்றோல் ☐ டீசல் ☐

(உரிய கூட்டிற்குள் ✓ **அடையாளமிடுக**)

6. தேர்தல் கடமைகளுக்காக நியமனஞ் செய்யப்பட்டுள்ள மாவட்டம் : .......................................

7. தேர்தல் கடமைகளுக்காக நியமனஞ் செய்யப்பட்டுள்ள பதவி : .............................................

8. அலுவலக தொலைபேசி இல. : ....................................................................................

9. தொலைநகல் இல. : ....................................................................................

மேலே குறிப்பிடப்பட்டுள்ள இலக்கத்தையுடைய எனது உத்தியோகபூர்வ வாகனத்தில்................................ மாவட்டத்திற்கு தேர்தல் கடமைகளுக்கு வருகை தருவதற்காக வாகனத்தைப் பயன்படுத்துவதற்கு அனுமதியைக் கோருகின்றேன்.

திகதி : .................................

..................................................................
விண்ணப்பிக்கும் அலுவலரின் கையொப்பம்

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலரின்........................................................... ஆம் இலக்க உத்தியோகபூர்வ வாகனத்தில் இம்மாவட்டத்திற்கு தேர்தல் கடமைகளுக்காக வருகை தருவதற்கு வாகனத்தைப் பயன்படுத்திக் கொள்வதற்கு அனுமதியளிக்கின்றேன்.

திகதி : .............................................

..................................................................
மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்/ பிரதி /
உதவித் தேர்தல்கள் ஆணையாளர்

............................................. மாவட்டம்.

**⁕ உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் (போக்குவரத்து)**

அனுமதி வழங்கப்பட்டதன் பின்னர் இதன் ஒரு பிரதியை கோவைப்படுத்தி வைத்துக்கொள்ள வேண்டும். மற்றைய பிரதியை அலுவலருக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவும். (தொலைநகல் மூலமாக அனுப்புவது மிகவும் பொருத்தமாகும்.)

குறிப்பு :- அலுவலர் தனது சொந்தப் பணத்தில் எரிபொருளைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்பதோடு, அப்பணம் தேர்தல் ஆணைக்குழுவினால் மீளளிப்புச் செய்யப்படும்.

AV - 01

சனாதிபதித் தேர்தல் - 2024.09.21

**உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் எடுத்துச் செல்கின்ற உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு (Assigned Vahicles) பெற்றுக் கொண்ட எரிபொருளுக்காக செலவிடப்பட்ட நிதியை மீளளிப்புச் செய்தல்.**

அமைச்சின்/ திணைக்களத்தின் பெயர் :- தொலைநகல் இல :- ...........................................

முகவரி :- தொலைபேசி :- ..................................................

| 01 | 02 | 03 | 04 | 05 | 06 | 07 | 08 | 09 | 10 | 11 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அலுவலரின் பெயர் | பதவி | வாகன இலக்கம் | தேர்தல் கடமைக்காக அறிக்கையிடப்பட்ட மாவட்டம் | தேர்தல் கடமைக்காக அறிக்கையிடப்பட்ட திகதி | அம்மாவட்டத்திற்குச் செல்வதற்கும், மீண்டும் வருவதற்கும் ஓடிய தூரம் கிலோ மீற்றரில் | உங்களால் பணம் செலுத்தி எரிபொருள் பெற்றுக்கொண்ட அளவு லீற்றரில் | தெரிவத்தாட்சி அலுவலர் வழங்கிய எரிபொருளின் அளவு லீற்றரில் | எரிபொருள் வகை (டீசல்/ பெற்றோல்) | எரிபொருள் விரயம் (லீற்றருக்கு கி.மீ) | மீளளிப்புச் செய்வதற்கு கோருகின்ற தொகை | |
| | | | | | | | | | | ரூபா | சதம் |
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |

2024.09.21 ஆம் திகதி நடாத்தப்பட்ட சனாதிபதித் தேர்தலில் தலைமை வாக்கெண்ணல் அலுவலராக/ பிரதி வாக்கெண்ணும் அலுவலராக/ உதவித் தெரிவத்தாட்சி அலுவலராக கடமையாற்றுவதற்கு எனது உத்தியோகபூர்வ வாகனத்தை ............................................................. மாவட்டத்திற்கு தேர்தல் கடமைக்காக செல்வதற்கு பயன்படுத்தியுள்ளதாக உறுதிப்படுத்துகின்றேன். இப்பிரயாணத்திற்காக ஓடிய தூரம் ................................ கிலோ மீற்றர்களாகும். அதற்காக விரயமாகிய எரிபொருள் டீசல்/ பெற்றோல் ....................................... லீற்றர்களாகும். இதற்காக..............................................ரூபா பணம் எனது சொந்த செலவில் மேற்கொள்ளப்பட்டதென்பதை உறுதிப்படுத்துகின்றேன். இப்பணத்தை மீளளிப்புச் செய்வதற்கான பற்றுச்சீட்டுக்களுடன், பொது 35 வவுச்சரை இத்துடன் சமர்ப்பிக்கின்றேன்.

....................................
அலுவலரின் கையொப்பம்
பெயருடன் பதவி முத்திரை

திகதி :- .........................